# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,880 — 1969 නොවැම්බර් 14 වැනි සිකුරාදා — 1969.11.14

14,480 ஆம் இலக்கம் — 1969 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. — | 1151 | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 1155 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. — | 1157 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் — .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | — | நானாவித அறிவித்தல்கள் .. .. | — |


## பதவிகள்—வெற்றிடம்

### " இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "

*1. படிகள்.—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.*

*2. கேள்விக்குரிய நிபந்தனைகள்.—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கரும முறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள், அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலத்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.*

*3. நியமன விதிகள்.—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் விதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத வீதத்தை அரசாங்க சேவைச் சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சதவீதத்தையோ செலுத்தினும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.*

*(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால், அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.*

*(iii) ஏற்கெனவே அரசாங்க சேவையில் இல்லாத அச் சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்தீவிடத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.*

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.*

*(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல்வேண்டும்.*

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1968 ம் ஆண்டு திசெம்பர் மீ 14 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்படச் ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறனடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில், பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடையவேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள்; அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.

5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்ச வழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக விருப்பவராகும்.

6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், நியமனைக்கும் படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளைவிட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.

---

## திருக்கோணமலை மாவட்டத்தில் குடாக்கரைக் கிராமப் பிரிவிற்கு பிறப்பு, இறப்பும், தம்பலகாமம் பற்று பிரிவிற்கு விவாக (பொது) பதிவாளர் பதவி

குடாக்கரைக் கிராமப் பிரிவு பிறப்பு, இறப்புப் பதிவுப் பிரிவிற்குள் நிரந்தரமாகக் குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சிலகாலம் வசிக்கிறவர்கள் அல்லது பொதுமக்களால் அங்கீகரிக்கக் கூடியவர்கள், ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொரு வயதிற்குக் குறையாதவர்களாயின் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களை பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும், ஏனைய பிற தராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள், இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சிச் சபை அலுவலகங்களிலும், கிராம நீதிமன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தானம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவுதாபன நிலையங்களிலும் இந்தப் பிரிவுக்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், காரியாலயங்களிலும், பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பப்பத்திரங்களில் நிரப்புவதோடு, 1969 ம் ஆண்டு டிசம்பர் (மார்கழி) மாதம் 15 ந் திகதியன்று அல்லது அதற்குமுன்பதாக எனக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால்மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

சோமபால குணதிர,
மாவட்டப் பதிவாளர்.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
திருக்கோணமலை,
1969 ம் ஆண்டு ஒக்ரோபர் மீ 31 ந் உ.

11-485—14.11.1969 ந் திகதிய வர்த்தமானி இல. 14,880

No. AB. 94/X2159/69

## விவசாயத் திணைக்களம்

பதவி: உதவிப்பொது முகாமையாளர் விவசாயத் திணைக்களத்திலுள்ள கால் நடை வளர்ப்புப் பண்ணைகள் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப் படும் அச்சிட்ட படிவங்களில எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை, அ.பெ. இல. 500, கொழும்பு 1, என்ற முகவரியில பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப் படுதல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள் .. 1969.12.12

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் .. 1969.12.19

**குறிப்பு.**—(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப்படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப் பட்டதும் 9″×4″ அளவிற் குறையாததும் முத்திரை யிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும் அபேட்சகராக வர விருப்பவர் அரசாங்க சேவையில் உள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப்படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர் பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற் குக் கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களை பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக்கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகவும் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(iv) மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்: இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளி நாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர் கள், சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர்களாயி ருக்கின்றார்களா வென்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப் பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக் காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய் வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தி யோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும் :**—பதவி நிரந்தர மானதும் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குரியதுமாகும்.

3. **சம்பளமும் படிகளும் :** இப்பதவிக் குரிய சம்பள அளவுத்திட்டம் வருமாறு :—

ஆண்டொன்றிற்கு ரூபா 4,080/- முதல் ரூபா 360/- கொண்ட 12 வருட, வருட சம்பள உயர்வுகளும் ரூபா 480/- கொண்ட 10 உயர்வுகளுமாக ரூபா 13,200/- வரை (ரூபா 8,880/- க்கும் ரூபா 11,760/- க்கும் முன்னதாக திறமைத்தடையும் ரூபா 11,280/- ல் இரண்டு வருட நிறுத்தமும் உடையது.)

4. **தேவையான தகைமைகள் :** ஒவ்வொரு அபேட்சகரும் பின் வரும் தகைமைகளையுடையவர் என்பதற்குத் திருத்தியான சான்று காட்டுதல் வேண்டும் :

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும் உடல் நலமுடைய வராயும் இருத்தல் வேண்டும் ;

(ஆ) 1969.12.12ல், 22 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்குக் கூடாமலும் இருத்தல் வேண்டும் (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்கள் குறிப்பிட்ட வயதுக்கு மேற்பட்டிருப் பினும் விண்ணப்பிக்கலாம்) ;

(இ) அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையில் அல்லது கால்நடை வளர்ப்பில் பட்டம் பெற்றவராகவோ அன்றி "டிப்ளமோ" பட்டம் பெற்றவராக இருப்பதுடன் மிருக வளர்ப்பு அல்லது மிருக சுகாதாரத்தில் 5 வருடத்திற்குக் குறையாத வேலை அனுபவம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்; அல்லது

(ஈ) மிருக சுகாதாரம் அல்லது உற்பத்தியில் குறைந்தது 10 வருட வெளிக்கள வேலை அனுபவமுடையவராகவும் சிரேட்ட திணைக் களப் பரீட்சையில் சித்தியடைந்த 1 ஆவது அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திலுள்ள கமத்தொழில் போதனாசிரியராகவும் இருத்தல் வேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும் பொழுது, சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (முக்கிய குறிப்பு) சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக் குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது,

(ஆ) பல்கலைக் கழகப் பட்டம் அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) கணசசான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடம் இருந்து பெற்றதாய் இருத்தல் வேண்டும்,

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும்/உயர் தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்,

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு.**—(1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது,

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற் றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங் கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங் களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் தேதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக் கூடியதாக அனுப்பப் படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("ஆ" எனக் குறியிடப்பட்டுள்ளது), இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறுகடிதத் தொடர்பு களையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, என முகவரியிட்டு அனுப்பவேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத் தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம் II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள, அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறியிடப்பட்டுள்ளது) அதன்கண் அறிவுறுத் தப்பட்டுள்ளவாறு விண்ணப்பக்காரர் நிரப்பித் திருப்பியனுப்பல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர் களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதி யிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமைபற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகாரியின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பக்காரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும் படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகாரசபை அலுவலகம்,
த.பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு ஒற்றோபர் மீ 31 ந் உ.

11-587/1—14.11.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,880.

No. AB. 108/×·2169/69

## கமத்தொழிற்றிணைக்களம்

### கமத்தொழில் உத்தியோகத்தர் (கிராமிய மனைப் பொருளாதார விரிவாக்கம்)—பதவி

கமத்தொழில் திணைக்களத்திலுள்ள கமத்தொழில் உத்தியோகத்தர் கிராமிய மனைப் பொருளாதார (விரிவாக்கம்) பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப் படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை, அ.பெ. இல. : 500, கொழும்பு 1, என்ற முகவரி யில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள், 1969.12.12.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள், 1969.12.19.

**குறிப்பு.**—(1) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப் பட்டதும் 9″×4″ அளவிற் குறையாததும் முத்திரை யிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத் தோடு அனுப்புதல் வேண்டும், மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(2) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற் குக்கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(3) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக்கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

(4) மருத்துவச் சோதனையும் பயணச் செலவும் : இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளி நாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர் கள், சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர் களாயிருக்கிறார்களாவென்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப் பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்கா கிய கட்டணத்தையும் இலங்கைக்கு பயணம் செய்வதற் காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத் தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும் :** இப்பதவி தற்காலிகமானது. அரசாங்க சேவை சகாய நிதிக்கு உதவு தொகை அளித்தல் வேண்டும்.

3. **சம்பளமும் படிகளும் :** இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :

ஆண்டொன்றுக்கு ரூபா 4,080/- ஆண்டு ஏற்றம் 12×360/-, 10×480/- ஆண்டொன்று ரூபா 13,200/- (ரூபா 8,880/-க்கும் ரூபா 11,760/-க்கும் முன்னர் வினைத்திறமைகாண் தடைகள்).

திரட்டுச்சம்பளம் ஆண்டொன்றுக்கு ரூபா 6,720/- ஆண்டு ஏற்றங் கள் 12×360, 11×480—ஆண்டொன்றுக்கு ரூபா 16,320/-) (ரூபா 11,520/-க்கும் ரூபா 14,400/-க்கும் முன்னர் வினைத்திறமைகாண் தடைகள்).

**குறிப்பு.**—ரூபா 8,880/-க்கு (திரட்டுச்சம்பளம் ரூபா 11,520/-க்கு முன்னர் உள்ள வினைத்திறமைகாண்தடையைக் கடக்க இத்திணைக்களத்தால் விதிக்கப்படும் பரீட்சைச் சித்தி வேண்டப் படும்.

4. **தேவையான தகைமைகள் :** ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளையுடையர் என்பதற்குத் திருத்தியான சான்று காட்டுதல் வேண்டும் :

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும் உடல் நலமுடைய வராயுமிருத்தல் வேண்டும்.

(ஆ) 1969.12.12 ல் 25 வயதுக்குக் குறையாமையும் 40 வயதுக்கு மேற் படாமையும் (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளோரின் விடயத்தில் வயதெல்லைகள் கவனிக்கப்படமாட்டா).

(இ) நன்கு மதிக்கப்படுமொரு பல்கலைக்கழகத்தின் மனைப் பொரு ளியற்பட்டம் உள்ளவர்.

**குறிப்பு.**—கிராமிய மனைப் பொருளியலில் அனுபவம். முக்கியமாக இத்துறையில் விரிவாக்க அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும்பொழுது, சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (முக்கிய குறிப்பு.—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலை களுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது) ;

(ஆ) பல்கலைக்கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ் ;

(இ) கணச்சான்றிதழ் இரண்டு, இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர் , கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத் தல் வேண்டும் ;

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும்/உயர் தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு.**—(1) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங் களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் , அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (“ ஆ ” எனக் குறியிடப் பட்டுள்ளது), இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை, என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (“ அ ” எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத் தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்பதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமைபற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட் டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமைபற்றிய அறிவித்தலை பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை,

அரசாங்க சேவை அதிகாரசபை அலுவலகம்,
அ.பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு ஒற்ரோபர் மீ 31 ந உ.

11-587/2—14.11.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,880.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### தமிழ் வாத்தியக் கோஷ்டியில் வெற்றிடங்கள்

பின்வரும் வாத்தியங்களை இசைக்கும் திறன் பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன :—

வயலின்
கிளாரினட்
தம்பூரா
தபேலா
கடம்
கஞ்சிரா

**தகைமைகள்**

விண்ணப்பதாரர்கள் 25 க்கும் 45 க்கும் இடைப்பட்ட வயதினராகவும், இலங்கையராகவும் இருத்தல் வேண்டும். வயலின், கிளாரினட், தபேலா, கடம், கஞ்சிரா ஆகிய வாத்தியங்களை வாசிப்பவர்கள் கருநாடக இசையில் உள்ள குறியீட்டுக் குறிப்புமுறை பற்றிய செயல்முறை அறிவும், இராகங்கள் பற்றிய அறிவும் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன், இசைக் குறிப்புகளை வாசிக்கவும், எழுதவும் ஆற்றல் பெற்றிருத்தல் வேண்டும். ஒன்றிற்கு மேற்பட்ட வாத்தியத்தை இசைக்கும் ஆற்றல் மேலதிகமான தகைமையாகக் கருதப்படும்.

**வேதன அளவு**

தரம் 1—ரூபா 450—675 (5 × 20—5 × 25) சகலதுமுட்பட.
தரம் 2—ரூபா 300—520 (8 × 15—5 × 20) சகலதுமுட்பட.
தரம் 3—ரூபா 250—400 (15 × 10) சகலதுமுட்பட.

இணைக்கப்பட்ட படிவத்தில் கண்டவாறு விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 1969 ஆம் ஆண்டு திசெம்பர் 21 ஆம் திகதிக்கு முன்னர், பதிவுத்தபாலில், கொழும்பு 7, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், மா அதிபருக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படவேண்டும். உறையின் மேலுள்ள இடது கோடியில், எதுபொருத்தமோ அதனை, வயலின்/கிளாரினட்/தம்பூரா/தபேலா/கடம்/கஞ்சிரா என்று எழுதப்படல வேண்டும்.

என். டீ. ஜயவீரா,
மா அதிபர்.

1969 ம் ஆண்டு நொவெம்பர் மீ 6 ந உ.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

.............................பதவிக்கான விண்ணப்பம்.

1. முழுப்பெயர் : ————.
(பெரிய எழுத்துக்களில்)

2. முகவரி : ————.

3. (அ) 1969.12.21 இல் வயது : ————.
........ வருடங்கள்........ மாதங்கள்........ நாட்கள்
(ஆ) பிறந்த திகதி : ————.
(பிறப்புச் சான்றிதழ் இணைக்கப்படல் வேண்டும்)

4. தேசிய இனம் : ————.

5. கல்வித் தகைமைகள் : ————.

6. இசை பற்றிய தகைமைகளும், அனுபவமும், வாத்தியக் கருவிகளை இசைக்கும் ஆற்றலும் : ————.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி : ————.

11–586—14.11.69 ந திகதிய வர்த்தமானி இல. 14,880.

---

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கைப் பரீட்சைப் பகுதி

### ஆங்கில ஆசிரியர் பரீட்சை
### பெப்ருவரி—1970

மேற்படி பரீட்சை கீழ்க் குறிப்பிடப்படும் பரீட்சை நிலையங்களில் 1970 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 27 ஆம் திகதி நடைபெறும்.

**பரீட்சை நிலையங்கள் :**

அம்பலாங்கொடை, அனுராதபுரம், வதுளை, பண்டாரவளை, மட்டக்களப்பு, கொழும்பு, தம்புலலை, திக்வலை, எகலியகொடை, கல்கமுவை, காலி, ஹோமாகம, ஹொரணை, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, குளியாப்பிட்டி, குருநாகல், மாத்தளை, மாத்தறை, மொனருகலை, நாவலப்பிட்டி, நீர்கொழும்பு, நுவரெலியா, பருத்தித்துறை, பொல்லநறுவை, இரத்தினபுரி, திரிகோணமலை, வவுனியா, வியாங்கொடை.

2. மாதிரி விண்ணப்பப் படிவம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இவை 8″ × 13″ அளவினதாய கடதாசியில் முறைப்படி தயாரிக்கப்பட்டு விண்ணப்பப் படிவம் (தட்டெழுத்து மூலம் தயாரிக்கப்படின் நன்று) 1969 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ந திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் பரீட்சாதிகாரி, பரீட்சைப் பகுதி, மலே வீதி, கொழும்பு 2 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். பரீட்சாதிகாரியின் அல்லது அங்கு கடமையாற்றும் வேறு ஊழியர்களினது தனிப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

வர்த்தமானப் பத்திரிகையிற் கொடுக்கப்பட்ட மாதிரிப் படிவத்தை ஒத்திராத, பரீட்சார்த்திகளால் தம் எண்ணப்படி தயாரித்து அனுப்பப்படும் விண்ணப்பங்களும், விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

3. பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களைப் பரீட்சாதிகாரிக்கு அனுப்புவதற்கு முன்னதாக 1965 ஆம் ஆண்டிலும் அதன் பின்னரும் நடைபெற்ற ஆங்கில ஆசிரியர் பரீட்சைக்கான பிரமாணங்களையும் பாடத்திட்டங்களையும் வாசித்து அவற்றைப் பற்றிய பூரண விளக்கத்தைப் பெறுதல் வேண்டும்.

4. திருத்தியமைத்த பாடத் திட்டத்தின் " ஏ " பிரிவில் மூன்று வினாத்தாள்களிற் சித்தியடைதல் வேண்டும். அவையாவன :

(i) ஆங்கிலப்பாஷை I

(ii) ஆங்கிலப்பாஷை II

(iii) ஆங்கில இலக்கியம் அல்லது விஞ்ஞான ஆங்கிலம் அல்லது வர்த்தக ஆங்கிலம்.

நியமிக்கப்பட்ட பாடப் புத்தகங்களில் ஒன்றை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட புத்தகங்களைப் பெற்றுக் கொள்ளவியலாத பரீட்சார்த்திகள், அப்புத்தகங்களிலிருந்து எடுக்கப்படாத மூன்றாவது வினாப்பத்திரத்துக்கு விடையிறுக்கக் கூடியதாகச் செய்யும் பொருட்டு, நியமிக்கப்பட்ட பாடப் புத்தகங்களிலிருந்து கொடுக்கப்படும் வினாக்களுடன் சேர்த்து விருப்பப்படி தெரிவு செய்வதற்கு வேறு வினாக்களும் கொடுக்கப்படும்.

5. இப்பிரமாணங்களையும் பாடத்திட்டங்களையும் நேரிற் பெறவிரும்புவோர் அரசாங்க வெளியீட்டு அலுவலகத்திலிருந்து 50 சதத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம் ; தபால் மூலம் பெற விரும்புவோர் தமது கடிதத்துடன் 1 ரூபா 10 சதத்திற்குரிய காசுக்கட்டளையையேனும் அல்லது அஞ்சற் கட்டளையையேனும் பரீட்சாதிகாரிக்கு அனுப்பினால் அவர்களுக்கு இது அனுப்பிவைக்கப்படும்.

## இலங்கைப் பரீட்சைப் பகுதி

**1970 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதத்தில் நடைபெறும் ஆங்கில ஆசிரியர் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவம்**

பரீட்சையின் எப்பகுதிக்குத் தோற்றுகிறீர் ; சுட்டிலக்கம் :
(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்).

........................

(இங்கே " ஏ " அல்லது " பீ " எனப் பெரிய எழுத்தில் எழுதுக).

1. பரீட்சார்த்தியின் வழமையான கையொப்பம் : ————.
ஆணு/பெண்ணு : ————.

2. பரீட்சார்த்தியின் முழுப் பெயர் : ————.
(வண./திரு./திருமதி/செல்வி என்பதைத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். ஆசிரியராயின் உத்தியோகத்தில் வழங்கும் பெயரினை எழுதுதல் வேண்டும். அன்றேல் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் உள்ள பெயரினை எழுதுதல் வேண்டும்).

3. நிரந்தர முகவரி : ————.
உத்தியோக முகவரி : ————.

4. பரீட்சை நிலையம் (விருப்பத்திற்குரிய வரிசைக் கிரமப்படி எழுதுக) :
1. :————.
2. :————.
3. :————.
(மூன்று நிலையங்களும் வேறு வேறாய் இருத்தல் வேண்டும்)

5. பரீட்சைக் கட்டணம் சம்பந்தமாகத் தேவையான முத்திரைகளை இங்கே ஒட்டுக. (ஆங்கில ஆசிரியர் பரீட்சை " ஏ " பிரிவிற்கு ரூபா 25.00, " பி " பிரிவிற்கு ரூபா 20)

| |
|---|
| முத்திரை ஒட்டும் இடம். இல் முத்திரை பரீட்சார்த்தியின் கையொப்பமும் திகதியும் இடப்பட்டுப் பயனற்றதாக்கப் பட வேண்டும். முத்திரைகள் ஒன்றையொன்று மருவாத வகையில் ஒட்டப்படல் வேண்டும். |

6. இலங்கை பிரஜா உரிமை.

வம்சாவழியிலா அல்லது பதிவு செய்ததனுலா, பதிவு செய்து கொண்டதாயின் அத்தாட்சிப் பத்திரத்தின் இலக்கத்தை குறிப்பிடுதல் வேண்டும்.

7. (i) பிறந்த திகதி : ————.

(ii) 1970 ஜனவரி 1 ஆம் தேதியன்று வயது : ————.
வருடம் : ———— ; மாதம் :———— ; நாள் : ————.

8. (i) சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையிற் சித்தியெய்திய—

வருடம் :————; மாதம் :————; சுட்டிலக்கம் :————.

வருடம் :————; மாதம் :————; சுட்டிலக்கம் :————.

(ii) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சையிற் சித்தியெய்திய—

(i) வருடம் :————; மாதம் :————; சுட்டிலக்கம் :————.

(ii) வருடம் :————; மாதம் :————; சுட்டிலக்கம் :————.

(iii) ஆங்கிலப்பாஷை " அ " பாடத்திட்டத்திற் சித்தியெய்திய

வருடம் :————; மாதம் :————; சுட்டிலக்கம் :————

வருடம் :————; மாதம் :————; சுட்டிலக்கம் :————.

(iv) ஆங்கிலப்பாஷை " ஆ " பாடத்திட்டத்திற் திறமைச் சித்தியாயின்—

வருடம் :————; மாதம் :————; சுட்டிலக்கம் :————.

9. ஆங்கில ஆசிரியர் தராதரப் பத்திரப் பரீட்சையில் " பீ " பிரிவிற்குத் தோற்றுவதாயின் " ஏ " பிரிவிற் சித்தியெய்திய—
வருடம் :————; மாதம் :————; சுட்டிலக்கம் :————.

10. ஆசிரியரின் பதிவிலக்கத்தை அல்லது நியமனக் கடிதத்தின் இலக்கத்தை அல்லது மகா கல்வியதிபதி அல்லது பிரதேசக் கல்வி அதிகாரியிடமிருந்து நியமன அங்கீகாரம் பற்றிய உறுதிக் கடிதத்தின் விபரத்தை இங்கே குறிப்பிடுக.

11. தாம் சித்தியடைந்த வேறு பரீட்சைகளின் அல்லது சேவையின் அடிப்படையில் சலுகை கோரின் அது பற்றிய விபரம் : ————.

சலுகை கோரும் பகுதி : ————.

12. சேவையிலுள்ள ஆசிரியர்களுக்கு மாத்திரம் :
இப்பகுதி பாடசாலை முகாமையாளரால் அல்லது தலைமை ஆசிரியரால் நிரப்பப்படல் வேண்டும்.

இப்பரீட்சார்த்தி சம்பந்தப்பட்ட சகல கடிதக் குறிப்புக்களையும் பரிசீலனை செய்தேன் எனவும், அவற்றின்படி, இவ்விண்ணப்பத்தின் 7ம் 8ம் கூடுகளிலுள்ள விபரங்கள் சரியானவை எனவும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

பாடசாலையின் பெயர் : ————.

பாடசாலை முகாமை : ————.

(அரசாங்க/கல்வியதிபதியின் முகாமைக்குட்பட்ட/உதவி நன்கொடை பெருத அனுமதி பெற்ற பாடசாலையா எனக் குறிப்பிடுக.)

கையொப்பம் : ————.

பெயர் : ————.

முகவரி : ————.

திகதி : ————.

13. **பரீட்சார்த்தியின் உறுதிக்கூற்று**.—இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும், இங்கு ஒட்டப்பட்ட முத்திரை என்னால் ஒட்டப்பட்டதெனவும், இது இதன் முன் பயன்படுத்தப்படாத பெறுமதியுள்ள முத்திரை எனவும் நான் உறுதி கூறுகிறேன். இப்பரீட்சை சம்பந்தமாகப் பரீட்சாதிகாரியாற் பிரசுரிக்கப்படும் பிரமாணங்களுக்கும் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தில் கீழ்ப்படிந்து ஒழுகவேண்டிய விதிகளுக்கும் ஒரே முகமாக இணங்கி நடப்பதற்கு உடன்படுகின்றேன்.

.....................................
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி : ————.

14. பரீட்சார்த்தியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் : (எல்லாப் பரீட்சார்த்திகளுக்கும்)

.......................................................... ஆகிய நான் மேற்கூறிய பரீட்சார்த்தி .................................... என்னுமிடத்தில் வதிபவர் எனவும், எனக்கு அவரை நன்கு தெரியும் எனவும், 1969 ஆம் ஆண்டு ................ மாதம் ............ ந் திகதி எனது முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டாரெனவும் உறுதிப்படுத்துகிறேன்.

.....................................
உறுதிப்படுத்தியவர் கையொப்பம்.

பெயர் : ————. தகுதி : ————.

முகவரி : ————. திகதி : ————.

**கவனிக்க வேண்டியவை :**

விண்ணப்பப் படிவத்தின் 14 ம் கூட்டில் பரீட்சார்த்தியின் கையொப்பம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகுதியுடைய ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(i) ஆசிரியராக இருக்கும் பரீட்சார்த்தி தான் படிப்பித்துக் கொண்டிருக்கும் பாடசாலைத் தலைவர் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டு, அதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

(ii) ஆசிரிய சேவையிலில்லாத பரீட்சார்த்தி இப்படிவத்திற் கேட்கப்பட்டுள்ள உறுதிப் பத்திரத்தை சமாதான நீதவான், சத்தியப் பிரமாண அதிகாரி, வழக்கறிஞர் அல்லது நொத்தாரிசு, 4,800/- ரூபாவையேனும் அதற்கு மேற்பட்ட தொகையையேனும் வருடாந்தச் சம்பளமாகப் பெறும் நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர் அல்லது தரைப்படை, கடற்படை, ஆகாயப்படை ஆகியவற்றிலுள்ள ஆணைபெற்ற உத்தியோகத்தர், அரசாங்க, கல்வி அதிகாரியின் முகாமைக்குட்பட்ட அல்லது அங்கீகாரம் பெற்ற பாடசாலை அதிபர் அல்லது அத்தகைய பாடசாலையின் ஓய்வு பெற்ற அதிபர், அப்பகுதியின் கிராமசேவகர், புத்தவிகாரைக்குப் பொறுப்பாகவுள்ள பிக்கு, தலைமைப் பிக்கு, வேறு மதபீடங்களுக்குப் பொறுப்பாக உள்ள மதகுருமார், மதிப்பிற்குரிய வேறு சமயப் பெரியார்கள் ஆகியோர்களில் ஒருவரைக் கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

மேற்கூறிய தகுதிவாய்ந்த ஒருவரால் பரீட்சார்த்தியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டது என்பதற்குப் பரீட்சார்த்தியே முழுப் பொறுப்பாளியாவர்.

கே. ரீ. டபிள்யூ. சுமனசூரிய,
பரீட்சாதிகாரி.

பரீட்சைப் பகுதி,
மலே வீதி,
கொழும்பு 2,
1969 ம் ஆண்டு நவெம்பர் மீ 2 ந் உ.

11-483—14.11.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,880

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## நன்னடத்தைப் பாதுகாவல் சிறுவர் நலன் கவனிப்பு சேவா திணைக்களம்

1969–70 நிதி வருடத்து முன் அரை ஆண்டு காலத்துக்குள் நன்னடத்தைப் பாதுகாவல் சிறுவர் நலன் கவனிப்பு சேவா திணைக்களத்தின் கீழ் உள்ள கட்டிட நிலையத்திற்கு கட்டிடப் பொருட்களை கொடுப்பதற்கான கேள்விப்பத்திரங்கள்.

கொழும்பு, காலி, களுத்துறை, பதுளை ஆகிய மாவட்டங்களின் கீழுள்ள கட்டிட நிலையங்களுக்கு கட்டிடப் பொருட்களை கொடுப்பதற்கான கேள்விப் பத்திரங்கள் நன்னடத்தைப் பாதுகாவல் சிறுவர் நலன் கவனிப்பு சேவா திணைக்களத்தின் ஆணையாளரால் 1969 கார்த்திகை மாதம் 20 ந் திகதி முற்பகல் 12 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**கொழும்பு மாவட்டம்**

(1) றன்முத்துகலே சான்று பெற்ற பெண் பாடசாலே ;
(2) வுட்பட் பாக்கொலே சான்று பெற்ற ஆண் பாடசாலே ;
(3) தெகிவலே விளக்கமறியல் விடுதி.

**காலி மாவட்டம்**

(1) கொக்கலே சான்று பெற்ற பாடசாலே ;
(2) காலி சிறுவர் இல்லம் ;
(3) திக்கடுவ சான்று பெற்ற பாடசாலே.

**களுத்துறை மாவட்டம்**

(1) பானதுறை சிறுவர் இல்லம்.

**பதுளை மாவட்டம்**

(1) கப்பற்றிப்பொலே சான்று பெற்ற பாடசாலே ;
(2) பண்டாறவெல சிறுவர் இல்லம்.

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

(1) பேர்ன்காம் பாடசாலே, அச்சுவேலி.

**கட்டிடப் பொருட்கள் பின்வருமாறு :**

(1) செதுக்காத கல் 6″ × 9″ கியூப்பாக ஒன்று ;
(2) உடைத்த கல்லு $\frac{3}{4}$″ கியூப்பாக ஒன்று ;
(3) ஆற்றுமணல் கியூப்பாக ஒன்று ;
(4) செங்கல் 1000 (பிரமாணம் $8\frac{3}{4}$″ × $4\frac{1}{2}$″ × $2\frac{3}{4}$″) ;
(5) சுட்ட சுண்ணும்பு புசலாக சாக்குடன் 85 ருத்தலுக்குக் குறையாத ;
(6) நீற்றுச் சுண்ணும்பு புசலாக சாக்குடன் 42 ருத்தலுக்குக் குறையாத ;
(7) மூங்கில் 25 அடி தொடக்கம் 30 அடிவரை.

கேள்விப்பத்திரம் பெறுவதற்குமுன் இக்காரியாலயத்திலோ அல்லது கிட்டுமானமான கச்சேரியிலோ வைப்புப்பணமாக 50 ரூபா கட்டி அதற்குரிய பற்றுச்சீட்டு எனக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் 1969, கார்த்திகை மாதம் 20 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் இக்காரியாலயத்திலே கொடுக்கப்பட்ட பத்திரத்தில் நிரப்பி பதிவுத்தபாலில் அல்லது கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் பெட்டிக்குள் 1969, கார்த்திகை 20 ந் திகதி முற்பகல் 12 மணிக்கு முன் அனுப்பப்படல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் யாவும் " கட்டிடப் பொருட்கள் கொடுப்பதற்கான கேள்விப் பத்திரம் " எனத் தபாலுறையின் இடது புறமேல் மூலையில் குறிப்பிட்டு ஆணையாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

கேள்விப் பத்திரக்காரர் கேள்விப்பத்திரங்கள் திறக்கும்போது 1969 கார்த்திகை 20 ம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு நன்னடத்தைப் பாதுகாவல் சிறுவர் நலன் கவனிப்பு சேவா திணைக்களத்தின் கொழும்பு, சதாம் வீதியே டி மெல் 103 1/1 ம் கட்டிட பிரதான காரியாலயத்தில் பிரசன்னமாக இருக்கலாம்.

தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் ஒரு கிழமைக்குள் நன்னடத்தைப் பாதுகாவல் சிறுவர் நலன்கவனிப்பு சேவா திணைக்களத்தின் ஆணையாளருடன் ஒப்பந்தம் ஒன்றிற்கு கைச்சாத்திடுமாறு வேண்டப்படுவர். குறிக்கப்பட்ட கால எல்லைக்குள் ஒப்பந்தம் சம்பந்தமாக கைச்சாத்திடத் தவறினல் வைப்புப் பணம் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாதென்றும், அப்பணம் அரசாங்கத்தின் நிதிக்குச் சேர்க்கப்படுமென்றும் ஒப்பந்தத்திற்கு தவறினவர்களென்று ஒப்பந்தப் பட்டியலில் சேர்க்கப்படுவார்கள் என்றும் கருதப்படுவார்கள்.

வேறும் விபரங்கள் தேவைப்படுமாயின் பிரதான காரியாலயத்தின் கட்டிட வேலைக் கிளையில் விசாரித்துக் கொள்ளலாம்.

எம். வீ. டீ. சந்ரரத்ன,
நன்னடத்தை பாதுகாவலர் சிறுவர் நலன்
கவனிப்பு சேவா திணைக்களத்தின் ஆணையாளர்.

11–456—14.11.69 ந் தேதிய வர்த்தமானி இல. 14,880

---

## கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

### கேள்விப்பத்திர அறிவித்தல்

வாழைச்சேனையிலுள்ள எமது ஆலைக்கு தொகையிலான கப்பற்சரக்கை எடுத்துச்செல்வதற்கு கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்கள் 14.12.1969 பி.ப. 2 00 மணிக்கு மூடப்படும்.

கேள்விப்பத்திர படிவங்களும் மற்றும் ஏனைய விபரங்களும் விண்ணப்ப மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

தி. ப. நாரன்பனுவ,
கொது முகாமையாளர்,
கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

356, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2, 1969 ம் ஆண்டு நவம்பர் மீ 18 ந உ.

11–593—14.11.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,880

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகனே வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

**அட்டவணை—1969**

| மாதம் | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| செத்தெம்பர் .. | 5.9.69 | வெள்ளி | .. | 29.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 12.9.69 | வெள்ளி | .. | 5.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 19.9.69 | வெள்ளி | .. | 12.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 26.9.69 | வெள்ளி | .. | 19.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| ஒற்ரோபர் .. | 2.10.69 | வியாழன் | .. | 26.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 9.10.69 | வியாழன் | .. | 2.10.69 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 17.10.69 | வெள்ளி | .. | 9.10.69 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 24.10.69 | வெள்ளி | .. | 17.10.69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 31.10.69 | வெள்ளி | .. | 24.10.69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| நவெம்பர் . | 7.11.69 | வெள்ளி | .. | 31.10.69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 14.11.69 | வெள்ளி | .. | 6.11.69 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 21.11.69 | வெள்ளி | .. | 14.11.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 28.11.69 | வெள்ளி | .. | 21.11.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| திசம்பர் . | 5.12.69 | வெள்ளி | .. | 28.11.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 12.12.69 | வெள்ளி | .. | 4.12.69 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 19.12.69 | வெள்ளி | .. | 12.12.69 | வெள்ளி | பி.ப | 3.30 |
| | 26.12.69 | வெள்ளி | .. | 18.12.69 | வியாழன் | பி.ப. | 3.30 |

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ஆம் ஆண்டு யூன் மீ 14 ஆந் வ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.